# ★ இராணுவ தளபதிகளிடையே நிரந்தர பிளவு


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 04 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 01 இதழ் 63
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13 — 04 — 192.


(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ படைத்தளபதிகளுக்கிடையில் நிரந்தர பிளவு ஏற்பட்டுள்ளதுடன் இவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் தொடர்ந்த வண்ணமிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ தளபதிகளுக்கிடையில ஏற்பட்டுள்ள பிளவினால் படைபலம் குறைய

(4ம் பக்கம் பார்க்க)

## மஹரகம குண்டுவெடிப்பு புதியவர்களின் வேலை!

(கொழும்பு)

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல தலைமறைவாகிய பின்னரே குண்டு வெடிப்புகள் இடம் பெற்றுள்ளன. மஹரகம குண்டுவெடிப்பில் புலிகள் ஈடுபட்டதற்கான சாத்தியங்கள் குறைவே என பாதுகாப்பு வட்டாரங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்புக்கு ஜே. வி. பி. பொறுப்பு?

(கொழும்பு)

மஹரகமவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கு ஜே. வி. பி. யினரே காரணமென சில கொழும்பு பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இச்செய்திகள் தொடர்பாக

[4ம் பக்கம் பார்க்க]

## ★ வடக்கு - கிழக்கில்

# இராணுவ நடவடிக்கைகளுக்கு விரைவில் பாதிப்பு ஏற்படலாம்?

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் படையினர் மேற்கொண்டுவரும் போர் நடவடிக்கைகள் விரைவில் பாதிப்படையலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தில் உயர் பதவிகளில் இருப்பவர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து மோதல்கள் அதிகரித்து வருவதன் காரணமாகவே வடக்கு, கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் எந்த நேரத்திலும் பாதிக்கப்படலாமென இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை குண்டு வெடிப்பில் 100 பேர் செவிடானார்கள்!

(அம்பாறை)

அம்பாறையில் பஸ்நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பினால் நூற்றுக்கணக்கானோர் செவிடானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ்நிலையத்தில் இடம் பெற்ற இக்குண்டுவெடிப்பு சத்தத்தால் அச்சுற்றுடலிலிருந்த நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு காதுகள் செவி

(4-ம் பக்கம் பார்க்க)

## முப்படைத் தளபதிகள் ஹமில்டனுக்கு உத்தரவு

(கொழும்பு)

ராணுவ செயற்பாடுகள், கட்டுப்பாடுகள் பகுதிகளுக்கெல்லாம் வராதீர்கள் என்று கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவை முப்படைத் தளபதிகள் கடிதம் மூலம் கேட்டுள்ளனர்.

ஜெனரல் அவர்களே நீங்கள் வெறும் ஆலோசனை சொல்வதோடு மட்டும் நின்று கொள்ளுங்கள் ராணுவ செயற்

[4-ம் பக்கம் பார்க்க]

## இறந்தோர் எண்ணிக்கை பதினொன்றாக அதிகரிப்பு

(கொழும்பு)

மஹரகமவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று மரணமானார். இதை தொடர்ந்து மஹரகமவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை பதினொன்றாக அதிகரித்துள்ளது.

## உடுகம்பொலவின் குற்றச்சாட்டுக்கள் அரசுக்கு வெட்கக்கேட்டை ஏற்படுத்தியுள்ளது

(கொழும்பு)

1988—1989 காலங்களில் எதிர்க்கட்சிகளின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைகொலை செய்வதில் ஆளும் ஐ. தே. கட்சி அரசு ஈடுபட்டுள்ளதாக முன்னாள் டி. ஐ. ஜி. உடுகம்பொல தெரிவித்த குற்றச்சாட்டுகள் அரசுக்கு வெட்கக்கேடான செயல் என்றும் அரசுக்கு இக்கட்டான நிலைமையை அது உரு

[4ம் பக்கம் பார்க்க]

## ஐ. தே. க. உயர்மட்ட குழு இந்தியப் பிரதமரை சந்திக்கும்

(கொழும்பு)

ஆந்திராவில் உள்ள திருப்பதியில் நாளை 14ம் திகதி நடைபெறவிருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளுமுகமாக இந்தியா செல்லும் ஐ. தே. கட்சியின் உயர்மட்டக்குழு இந்தி

(4-ம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டு வாழ்த்துக்கள்

'ஈழநாடு' வாசகர்கள்,
அன்பர்கள்,
ஆதரவாளர்கள்,
விளம்பரதாரர்கள்,
பத்திரிகை முகவர்கள்
அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிறோம்.

— நிர்வாகி.

## நாட்டில் மீண்டும் ஒரு குழப்பநிலை ஏற்படலாம் — ஜனாதிபதி

(கொழும்பு)

"ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத சக்திகளால் நாட்டில் மீண்டும் ஒரு குழப்ப நிலை ஏற்படலாம் எனவே மக்கள் எச்சரிக்கையுடன் விழிப்பாக இருக்கவேண்டும்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு மதாவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துவருகின்

[4ம் பக்கம் பார்க்க]

### 'ஈழநாடு'வுக்கு விடுமுறை

புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு, இன்று 13ந் திகதி திங்கட்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்திற்கு விடுமுறை நாளாகும். ஆதலால் நாளை 14ந் திகதி செவ்வாய்க்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

— நிர்வாகி.

## புலிகளே தமிழர்களின் ஒரே பிரதிநிதிகள் - பிரிட்டிஷ் தூதுவர்

(கொழும்பு)

தமிழர்களின் ஒரே பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள்தான் என்று இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

இலங்கை இனப்பிரச்னை

[4-ம் பக்கம் பார்க்க]

## படையினரை இடைமறித்து புலிகள் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலையில் காட்டுப்பாதையூடாக முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் இடைமறித்து தாக்கி வருகின்றனர்.

இக்காட்டுப்பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ படையெடுப்பு

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### PITAWAKKA PLUS

மதுபானத்தில் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத் தன்மைகளுக்குமாக 9 வகைமூலிகை அடங்கியது. கிடைசுகுமிடம் எஸ். ரி, மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6098)

### பாலாஜி புத்தகசாலை

புத்தம் புதிய அழகிய டிசைன்களில் பிறந்தநாள் வாழ்த்துமடலகள் விற்பனைக்குண்டு, வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு. 1-ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2078)

### தவறிவிட்டது

முரசுமோட்டை ஊரியான் பாதையில் ரவலிங்பாக் 8-4-92 இரவு தவறியுள்ளது. இதை எடுத்தவர்கள் கருணை கூர்ந்து திருமதி சரஸ்வதி தில்லையம்பலம், மண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி வலாசத்தில் கரும்படி கேட்டுக் கொள்கிறேன். (தகுந்த சன்மானம் வழங்கப்படும். (எ-2077)

### நோவு வைத்தியம்

ஒட்டப்புலம சமத்தர்நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 6040)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள். வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்சசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்கள். பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம். 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [சி-6126]

### தேவை

கொம்பசிஸ்டர், மெசின் மயின்டர், பையின்டர் அனுபமம் உள்ளவர் நேரில் வரவும். எம். ஏ. எஸ். ஜே. பிரின்டிங் வேக்ஸ், கே. கே. எஸ். ரோட், மல்லாகம். (சி 6147)

### சோதிட விஞ்ஞான நூல்கள்

புதுவருட பலன்களும், 27-4-92- செவ்வாய் மாற்றமும் ரூ. 7/- எங்கும் விற்பனையாகின்றன. நூலாசிரியர்: Prof. சத்தியதாஸன், சோபிதா, யாழ்ப்பாணம். (சி-6156)

### கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரால் 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, சச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (சி-6158)

## ஜாம், பியர் போத்தல்கள் தேவை

ஜாம், புரோடினேக்ஸ், கோடியல் (Cordial) .சோஸ் Saurce), பியர் [நெல்லிரசம்] போத்தல்கள் ரூபா 3/-க்கு மேல் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

**TasteLine Industries(Pvt)Ltd**

No. 14, Seenier Lane, Jaffna. (சி-2055)

மீண்டும் ★

## குளிர் பானங்கள்

அனைவருக்கும்

றிக்கோ ஸ்தாபனத்தின்

குளிர்மையான

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

அத்துடன் குளிரூட்டும் சுவையான செய்தி: மீண்டும்

★ ஸ்பெசல் ஐஸ் கோப்பி, ★ ஐஸ் சர்பத்,
★ ஒறேஞ் யூஸ், ★ நெல்லி கிறெஸ்,
★ மிக்ஸ் புறூட் யூஸ்

அத்தனையும் ஜில் என எந்நேரமும் நாம் தருகின்றோம்.
என்ன யோசனை? ஒருமுறை வந்து பாருங்களேன்.

இதோ முகவரி:

## றிக்கோ

370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி 6150)

## பரீட்சையில் சித்தி

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை ரீதியில் பதிவாளர்களுக்காக நடாத்தப்பட்ட பரீட்சையில், யாழ். செயலகத்தைச் சேர்ந்த பொ. ஈஸ்பரதாசன், அ. பொன்னம்பலம் ஆகிய இருவரும் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை ஆத்தியடி இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்க 79 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை 14 ஆம் திகதி இளைஞர் கல்வித் தேர்ச்சி மண்டபத்தில் திரு. நா. ஞானகுமாரன் தலைமையில் நடைபெறும்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### கந்தர் வேலுப்பிள்ளை

தோற்றம்: 15-10-1915
மறைவு: 04-04-1990

திதி: 13-04-1992

தங்கள் ஆன்மா சாந்தியடைய
வண்ணை காமாட்சி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

569, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். [சி 6157]

## இன்று புத்தாண்டு
## ‘இசைத் தென்றல்’

விழிப்புலன் குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு இலவச கண்ணாடி வழங்கும் நிதிக்காக நடைபெறும் இசைத்தென்றல் நிகழ்ச்சிகள்.

இடம்: சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
காலம்: 13-04-1992 திங்கட்கிழமை மாலை 6-30 மணி.

### நிகழ்ச்சிகள்:

1. கவிதாலயாவின் இளந் தென்றல் இசை நிகழ்ச்சி.
2. கவிதாலயா இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி.
3. இராஜன் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி.

லயன்ஸ் கழகம்
சாவகச்சேரி.

(எ-2079)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### சபாபதி நாகராசா

(விநாயகர் அரிவுத் தொழிற்சாலை உரிமையாளர்)

தோற்றம்: 8 - 4 - 1930 மறைவு: 8 - 5 - 1987

திதி: 13 - 4 - 1992 (திங்கள்)

அன்புடன் பழகி ஆர்வமுடன் உழைத்தீர்
நீங்கள் பெற்ற செல்வங்களின் உயர்வுக்காய்
வாழ்நாள் முழுவதும் பாடுபட்டீர் - ஆனல்
அவர்களின் நல்வாழ்வை பார்க்குமுன்
இறைபற்றில் வாழ்ந்த எம் குலதெய்வமே
நீங்கள் மறைந்து ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை வட்டுப் போகுமா -
ஐயா

உங்கள் ஆத்மா சாந்திபெற
கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிரதான வீதி,
சங்கானை.

(சி-6153)

உ
சிவமயம்

‘‘கேடில் விழுச்செல்வம் கல்வியொருவற்கு - மாடல்ல மற்றயவை’’ — குறள்

## வாரிவளவு நல்லியக்கச் சபை - காரைநகர்

★ தமிழ்ப் புதுவருடத்தை முன்னிட்டு ★

காரைச் சிறுவர்கள் ஆண்டுதோறும் பெருமையுடன் எடுக்கும்

## கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பும்
## 1992

**இடம்: கைலாசபதி அரங்கு - யாழ். பல்கலைக்கழகம்**
**காலம்: 1992-04-15 புதன்கிழமை பி. ப. 1-00 மணி**

காரை சிறுவர்கள், மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளும்‘
செல்வி பரமேஸ்வரி கணேசன் அவர்களின்
இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்

காரைநகரிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு ★ மருத்துவம் ★ பொறியியல் ★ கலை முகாமைத்துவ பீடங்களுக்குத் (1989) தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கி கௌரவித்தல்

அன்பர்கள் அனைவரையும் ‘வருக’ ‘வருக’ என
அன்புக்கரங்கூப்பி அழைக்கின்றோம்

## வாரிவளவு நல்லியக்கச் சபையினர்

ஆதரவு: கனகசபை தர்மகுலசிங்கம், காரைநகர். (சி 6123)

# தமிழ்க் குழுக்களுடன் பேச்சு: எதுவிதபிரயோசனமும் இல்லை

## ‘ஹெல உறுமய’ பிரமுகர் கூறுகிறுர்

(கொழும்பு)

யுத்த நடவடிக்கையின் மூலமே அரசியல் தீர்வொன்றிற்கு செல்லமுடியுமென 'ஹெல உறுமய' சிருஸ்டிகர்த்தாவும் சுதந்திரக் கட்சியின் களுத்துறை எம். பி.யுமான திரு. திலக் கருணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஈழக் கோரிக்கையை முன் வைக்காத கூட்டணி, தமிழ் காங்கிரசுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லை. புலிகளைத் தவிர ஏனைய தமிழ் கட்சிகள் அரசின் பாதுகாப்பில் தங்கியிருந்தே தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன. தமிழ் மக்களிடமிருந்து இவர்களுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. இவர்கள் மக்கள் மத்தியில் சென்று அரசியல் வேலை செய்யக்கூடிய கட்சிகளல்ல. இவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதில் எதுவித பயனுமில்லை.

புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதன் மூலமே அவர்களை பேச்சுவார்த்தைக்கு கொண்டுவரலாம். சமஷ்டி ஆட்சிமுறையை சிங்கள மக்கள் எதிர்க்கமாட்டார்கள். எனினும் இந்த சமஷ்டி ஆட்சி எந்தப் பிரதேசத்தில் ஏற்பட வேண்டும் மற்றும் பிரிக்கப் படவேண்டிய பிரதேசம்பற்றி கலந்துரையாடவேண்டும் என்ருர். (சி)

## இனிய ஆண்டாய் மலர்வாயே!

வருக! வருக! புத்தாண்டே
வாழ்வு சிறக்க வருவாயே
பெருகும் போரின் துயரெல்லாம்
போக்கி அன்பை நிறைப்பாயே!
வறுமை செல்வர் எனும்பேதம்
இனியும் பாரில் இல்லையெனும்
பெருமை பூத்துக் குலுங்கின்ற
பெயரும் விளங்க வருவாயே!
கல்வி சிறக்க மக்களெலாம்
கருணை நெஞ்சில் நிறைந்திருக்க
நல்வழி சொல்லி உதிப்பாயே
நலன்கள் யாவும் குவிப்பாயே!
புதிய பொலிவு உலகெங்கும்
பிறக்கும் ஆண்டாய் ஜொலிப்பாயே
இதயம் மகிழ்ந்து நாம்சிரிக்கும்
இனிய ஆண்டாய் மலர்வாயே

—இரி

# புலிகளின் குண்டு நிபுணர் கொழும்பினுள் ஊடுருவல்

## உளவுப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகர்னுள் புலிகளின் வெடிகுண்டு நிபுணர் ரூபன் ஊடுருவியுள்ளதாக தேசிய உளவறியும பிரிவு அறிவித்துள்ளது.

புலிகளின் மட்டக்களப்பு முக்கியஸ்தரும் குண்டு வெடிப்பு நிபுணருமான ரூபன் கொழும்பில் தங்கியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது. இதுகுறித்து ஏனைய தமிழ் இயக்கங்கள் அவதானமாகச் செயற்படவேண்டுமென தேசிய உளவறியும்பிரிவு எச்சரித்துள்ளதாம்.

மட்டக்களப்பு பகுதியில் புலிகள் படையினருக்கு எதிராக மேற்கொண்ட குண்டுத் தாக்குதல்களில் ரூபன் முக்கிய பங்கு வகித்தவரெனவும், கொழும்பிலும் இவர் தாக்குதல் எதனையும் நடத்தலாமெனவும் தற்போது ரூபனின் படம் தேசிய உளவறியும் பிரிவு உட்பட முக்கிய பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாம். (சி)

### தேர்த் திருவிழா

[யாழ்ப்பாணம்[

கைதடி அருள்மிகு வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் தேர்த்திருவிழா இம்மாதம் 16ம் திகதி வியாழக்கிழமையும். 17ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (சு)

### நிரந்தர நியமனம்

(உடுவில்)

யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த ஒன்பது தற்காலிக சாரதிகளுக்கு வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு நிரந்தர நியமனம் வழங்கியுள்ளது.

[109]

ஊரியான்

### படகுச்சேவை நிறுத்தம்

(பளை)

ஊரியான் படகுச் சேவை நீர்வற்றிய காரணத்தினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இப்படகுச்சேவை வண்ணங்குளம் தொடக்கம் கொம்படி வரை நடைபெறுகின்றது.

### மினிபஸ் கட்டணம் குறைப்பு

(புலோலி)

பருத்தித்துறை — யாழ்ப்பாணம் மினிபஸ் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னர் ஒருவழிக் சட்டணமாக 25 ரூபா அறவிடப்பட்டு வந்தது. தற்போது 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 20 ரூபா அறவிடப்பட்டு வருகிறது. (61)

## அச்சுத்துறை ஊழியர்க்கு 500 ரூபா சம்பள உயர்வு

(கொழும்பு)

அச்சுத்துறை ஊழியர்களுக்கு 500 ரூபா சம்பள உயர்வு வழங்க சம்பள நிர்ணய சபை சிபார்சு செய்துள்ளது.

அச்சுத்துறையில் இருக்கும் ஊழியர்களது வேதனம் பற்றி ஆராய கூடிய மேற்படி சம்பள நிர்ணயசபை 500 ரூபா அதிகரிப்பிற்கு சிபார்சு செய்துள்ளது.

அண்மையில் கூடிய சம்பள நிர்ணயசபை பத்திரிகையாளர்களின் அடிப்படை சம்பளத்தை ஆயிரம் ரூபாவால் அதிகரித்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

## இரிக்கெட்: மே. இந்தியஅணி 10 விக்கெட்டால் வெற்றி

(ஜமேக்கா)

மே. இந்திய அணிக்கும், தெ. ஆபிரிக்க அணிக்குமிடையில் நடைபெற்ற 2வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மே. இந்திய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய தெ. ஆபிரிக்க அணி 43 4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்திய அணி 24.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 153 ஓட்டங்களைப்பெற்றது. [பிறெய்ன்லாரா 86, கெயின்ஸ்- ஆட்டமிழக்காமல் 59]

3 ஒருநாள் போட்டியில் 2 போட்டிகளில் வெற்றிபெற்று மே. இந்திய அணி போட்டித் தொடரை வென்றுள்ளது [சி]

### இன்று ரதோற்சவம்

[மானிப்பாய்]

மருதடி விநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று 13ம் திகதி திங்கள் நடைபெறவுள்ளது. காலை 11 மணிக்கு ஆரம்பமாகும் வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு ரதோற்சவம் இடம்பெறும். (71)

### தவக்கால நற்சிந்தனை

''ஏழைகள் உங்களோடு என்றும் உள்ளனர். நானோ உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை''

அரு. 12:8

பாஸ்காவுக்கு ஆறு நாட்களுக்கு முன் யேசு கூறிய வாக்கு. ஏழைகளுக்கு நாம் காட்டும் பரிவு அவருக்குக் காட்டியதற்கு சமம்.

மோ-தார்சீசியஸ்

## இராசிபலன்

13 04/1992
திங்கட்கிழமை
(தமிழுக்கு சித்திரை 01)

ஏகாதசி மாலை 6-05வரை. மகம் - மரணயோகம் மு. இ. 8-02வரை. இராகுகாலம் காலை 7-35 முதல 9-05வரை. சுபநேரம் பகல் 12-05 முதல் 1-35 வரை. ஏகாதசி விரதம்.

மேடம்: தாய்வழி நினைவு. வேலைப்பளு. பணவரவு.

இடபம்: புதிய சிந்தனை. இனசன வரவு. செலவு.

மிதுனம்: புதிய உறவு. தலைமைத்துவம். தானதர்மம்.

சடகம்: பணியாள்சகாயம். பாராட்டு, நண்பர் உதவி,

சிங்கம்: பிரயாசம், உறவினர் மகிழ்ச்சி. புகழ்.

சன்னி: காரிய சிறப்பு. இனியவார்த்தை, தெய்வீகச் செலவு

துலாம்: புதிய ஸ்தானம், மனமகிழ்ச்சி, தியாகம்.

விருச்சிகம்: பெண்பாராட்டு நற்செயல், அதிஸ்டம்.

தனுசு; ஜீவனசுகம், பொது ஜன மதிப்பு. வாக்குவன்மை

மகரம்; பிடிவாதம், தெய்வ சிந்தனை, சோம்பல்.

கும்பம்: தற்பெருமை. குடும்ப சுகம், உல்லாசம்

மீனம்: தியானம், வாக்கு வன்மை, விருந்துபசாரம்.

- ஜோஸ்யர்


# இலங்கை வங்கி

தமிழ்ப் புத்தாண்டு பண்டிகைக்கால
வெகுமதியாக
சேமிப்புச் சான்றிதழ்களுக்கு அதிகரித்த
வட்டியை வழங்குகிறது

காலம்: 06-04-1992 முதல்
30-06-1992 வரை மட்டும்.

| சேமிப்புச் சான்றிதழின் பெறுமதி | நீங்கள் செலுத்த வேண்டிய தொகை: 6 மாத முதிர்வுக்கு 14.5% | 12 மாத முதிர்வுக்கு 16% | 24 மாத முதிர்வுக்கு 17% |
|---|---|---|---|
| ரூபா 200 | 186/- | 172/- | 149/- |
| ரூபா 500 | 466/- | 431/- | 373/- |
| ரூபா 1,000 | 932/- | 862/- | 746/- |
| ரூபா 5,000 | 4,662/- | 4,310/- | 3,731/- |
| ரூபா 10,000 | 9,324/- | 8,621/- | 7,463 - |
| ரூபா 25,000 | 23,310/- | 21,552/- | 18,657/- |

★ உங்கள் அன்பிற்குரியோருக்கு புத்தாண்டுப் பரிசாக இலங்கை வங்கி சேமிப்புச் சான்றிதழ்களை கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்யுங்கள்.

## இதோ இன்னுமோர் அரிய வாய்ப்பு!

இலங்கை வங்கியின் உத்தரவாதத்துடன்
உங்கள் முதலீடுகள் பல்கிப் பெருகிட

## “சீ பாங் யூனிட் ரஸ்ட்”

பங்குகளில் முதலீடு செய்யுங்கள்
விபரங்களுக்கு முந்துங்கள்

# இலங்கை வங்கி

கிளைகளை நாடுங்கள்.

(எ-2060)

## தமிழகத்தில் கடலோர பொலிஸ் படையொன்றை அமைக்குமாறு ஆலோசனை

(சென்னை)

தமிழ் நாட்டிற்குள் இலங்கைப் போராளிகள் ஊடுருவலைக் கட்டுப்படுத்துவதற்கு கடலோர பொலிஸ் படையொன்றை அமைக்க வேண்டுமென்று இந்திய கடற்படையின் கிழக்கு பிரிவுத்தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் பி.எஸ். செகவோட் யோசனை தெரிவித்துள்ளார்.

கோடிக்கரை, வேதாரண்யம் ஆகிய இடங்களிலுள்ள கப்பல்படைப் பிரிவைப் பார்வையிட்ட பின்பு நாகபட்டினத்தில் பத்திரிகையாளர் மத்தியில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் இருக்கும் வரை இந்திய கடற்படை பாதுகாப்பு அளிக்குமென்றும் தெரிவித்தார். (மா)

## திருமலையில் கைதாகும் தமிழர்கள் காணாமல் போகின்றனர்

[திருகோணமலை]

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உவர்மலை, லிங்கநகர் ஆகிய பகுதிகள் அடிக்கடி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு, முகமூடி அணிந்த இளைஞர்கள் முன்னால் ஆண்கள், பெண்கள் நிறுத்தப்பட்டுக் கைதுசெய்யப்பட்டு இராணுவத்தினரால் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுக் காணாமற்போகின்றனர். இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்கள் பெரும் பீதியுடனும், பதற்றத்துடனும் காணப்படுகின்றனர். [137]

### உடுகம்பொலவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கியுள்ளதாகவும் அரசியல் விமர்சகர் ஹெக்டர் அபயவர்த்தன கெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

மனச்சாட்சியை மதிக்கும் எந்த அரசும் உடனடியாகப் பதவி விலகவேண்டும். ஆனால் தற்போதைய அரசாங்கம் பதவியை விட்டு விலகாது என்றார். (மா)

## சுகாதாரசேவை பணிப்பாளர்

(பண்டத்தரிப்பு)

யாழ். பிரதேச சுகாதார சேவை பணிப்பாளராக டாக்டர் பி. இரத்தினசபாபதி இம்மாதம் 1ம் திகதி தொடக்கம் பதவி ஏற்றுள்ளார். (72)

## திருமலை வீடுகளில் குடும்ப விபர அட்டைகள் தொங்கவிடப்படவேண்டும்

[திருகோணமலை]

திருகோணமலை மாவட்டத்தில் வசிப்பவர்கள், தமது வீடுகளில் தங்கள் குடும்ப விபரங்கள் அடங்கிய அட்டையைத் தொங்கவிடவேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பமும் கிராம உத்தியோகத்தர், பொலிஸ் அதிகாரி ஆகியோரால் ஒப்பம் இட்டு வழங்கப்பட்ட குடும்ப விபரம் அடங்கிய குடும்ப அட்டைகளை வீட்டின் முன்பு தொங்கவிடவேண்டும். இராணுவத்தினர் பொலிஸார் வீடுகளுக்குச் சென்று சோதனை செய்யும்பொழுது, குடும்ப அங்கத்தவர்கள் குறைந்திருந்தாலும் அல்லது கூடியிருந்தாலும் பெரும் செடுபிடிகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. (137)

### படையினரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று புலிகளால் முறியடிக்கப்பட்டது தெரிந்தது.

புலிகளின் தாக்குதலினால் படையின் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### முப்படைத்தளபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகள் குறித்து கதைக்கார்கள் என்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதனால் இரு பகுதியினருக்குமிடையில் இழுபறி நிலை தொடர்ந்து ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

### வடக்கு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திலுள்ள உயர் பதவிகளைச் சேர்ந்தவர்களிடையே ஏற்பட்டுள்ள இக்கருத்து மோதல்கள் ஜனாதிபதி திரு. பிரேமதாசாவுக்கு புதியதொரு பிரச்னையை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவரைக் கொண்டு இராணுவத்தைக் கட்டுப்படுத்துவது வழிநடத்துவது எவரது தலைமையின் கீழ் வடக்கு கிழக்கு தாக்குதல்களை நடத்துவது போன்ற பலவித மான சிக்கலான பிரச்னைகளுக்கு ஜனாதிபதி தற்போது முகம்கொடுக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாம்.

இந்த நிலையில் வடக்கு கிழக்கில் போர் நடவடிக்கைகள் எந்த நேரத்திலும் பாதிக்கப்படலாமெனை அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் 400 பேர் கைது

[கொழும்பு]

கடந்த ஒருவாரத்தில் கொழும்பு நகர்ப்பகுதியில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட சுமார் 400பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்களில் பெருந்தொகையான முடிச்சுமாறிகளும் அடங்குவர். குற்றத்தடுப்பு பணியகத்தைச் சேர்ந்த சாதாரண உடைதரித்த 300 புலனாய்வு அதிகாரிகளுக்கு சீருடை தரித்த பொலிஸார் இந்நடவடிக்கைக்கு உதவியுள்ளனர்.

வீதிகளில் பாதுகாப்பு பரிசோதனை நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [சி]

## உடுகம்பொல பத்திரிகைகளை விடுத்து நீதிமன்றத்தை பயன்படுத்தவேண்டும்

(கொழும்பு)

முன்னாள் பிரதிபொலிஸ்மா அதிபர் திரு. உடுகம்பொல ஐ. தே. கட்சி அரசு மீது சேறு பூசுவதற்கு பத்திரிகைகளை பயன்படுத்துவதிலும் பார்க்க அவரது குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு நீதிமன்றத்தை அவர் பயன்படுத்திக்கொள்ளட்டும்',

கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்; திரு. உடுகம்பொலவின் அறிக்கைகளுக்கு இருக்கக்கூடிய சகல பலவீனங்களின் மத்தியிலும் அவரது அறிக்கையின் உண்மை, பொய்களை பரீட்சித்துப்பார்க்க அரசாங்கம் விரும்புகிறது.

எனவே இவ்விவகாரத்தை கையாளும் முழுப்பொறுப்பையும் அரசாங்க அதிகாரிகளிடம் அரசு ஒப்படைத்துள்ளது என்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு உதவியளிக்க திரு. உடுகம்பொல தயாரில்லை என்றும், அமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அம்பாறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாகியுள்ளன.

இக்குண்டு வெடிப்பு சுமார் 10 மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள கிராமங்களுக்கு கேட்டுள்ளது பல கட்டடங்களும் வீடுகளும் சேதமடைந்துள்ளன. (சி)

### ஐ தே. க.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யப் பிரதமர், மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்தித்து உரையாடவுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் இருதரப்பு அரசியல்-பொருளாதார விடயங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடைபெறும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். எம் மன்சூர் தலைமையில் உயர் மட்டக்குழுவினர் இன்று திங்கட்கிழமை இந்தியா புறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### குண்டுவெடிப்பு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

தலைமறைவாகவுள்ள ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கா பி. பி. ஸி. யுடன் தொடர்பு கொண்டு ஜே. வி. பி. க்கும் இந்த குண்டுவெடிப்புக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்று கூறியதுடன் சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ள இந்த செய்திகளை அவர் முற்றாக நிராகரித்துள்ளார். (மா)

### மஹரகம

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்துள்ளன.

மகரகமவில் கடந்த வெள்ளி இடம் பெற்ற குண்டு வெடிப்பு குறித்து விசாரணையாளர்கள் பெரும் சந்தேகம் கொண்டுள்ளனர் இது அனுபவமற்ற புதியவர்களின் வேலையே என்றும் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்த எடுக்கப்படும் சதியின் ஓரங்கம் என்றும் பொலிசார் சந்தேகம் கொண்டுள்ளனர்.

புலிகளால் பயன்படுத்தப்படும் சக்தி வாய்ந்த நவீன வெடி மருந்துகள் இதில் பயன்படுத்தப்படவில்லை.

ஜே. வி. பி. பயங்கரவாத காலகட்டத்திற்கு இலங்கையை மீண்டும் இழுத்துச் செல்லும் ஒரு முயற்சி இது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர் உணவு முத்திரைக்கு பாவனைக்கு உதவாத பொருள்கள் விநியோகம்

[உடுவில்]

ஜனவரி மாதத்திற்கான மாணவர் உணவு முத்திரைகளுக்கு கூட்டுறவுக்கடைகள் மூலம் வழங்கப்பட்ட பொருள்கள் பாவனைக்கு உதவாததரம் குறைந்தவையாக இருந்தமையையிட்டு உதவி அரசாங்க அதிபருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு உணவு முத்திரைக்கு வழங்கிய பொருள்களை வித்தியாலய அதிபரிடம் நேரடியாக எடுத்துச் சென்றுகாண்பித்தனர்.

பழுதடைந்த உழுத்துப் போன கௌப்பி, அரிசி, பயறு போன்ற பாவனைக்கு உதவாத அப்பொருள்களை பார்வையிட்ட வித்தியாலய அதிபர் திரு. கே. நடராசா இது சம்பந்தமாக வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

1991 ஒக்டோபர், 1992 பெப்ரவரி ஆகிய மாதங்களுக்கு வழங்கப்பட உள்ள உணவு முத்திரைகளுக்கு பாவனைக்குகந்த பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிபர் உதவி அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

### நாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றன அம்பாறை, மஹரகம போன்ற இடங்களில் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்களால்பல பேர் கொல்லப்பட்டுள்ளனர். (க)

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்கப்படவேண்டுமானால் புலிகளும் அரசும்தான் பேச்சு நடத்தவேண்டும். தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக புலிகள்தான் இருக்கிறார்கள். எனவே அவர்களுடன் அரசு பேச்சு நடத்தி இனப்பிரச்னை தீர்விற்கு முயற்சி செய்யலாமென்றும் அவர் மேலும் கூறினார்.

## மேதினத்தில் லலித்-காமினி

[கொழும்பு]

கொழும்பில் நடைபெறவிருக்கும் எதிர்கட்சிகளின் ஒன்றிணைந்த மேதினத்தில் லலித்-காமினி தலைமையிலான ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியும் பங்குபற்றக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (மா)

### இராணுவ

(1-ம பக்கத் தொடர்ச்சி)

லாம் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இந்த இராணுவ அதிகாரிகளுக்கு மத்தியில் அதிகாரசமபலத்தில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. சிங்கள தமிழ் புத்தாண்டின் பின் மீண்டும் போர் நடைபெறலாம் இதன்போது படையின் பங்களிப்புபற்றி கூறமுடியாதிருப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் சுப்பிரமணியம்

சோமசுந்தரம் சுப்பிரமணியம் [ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்) 12-04-92 அன்று காலமானார். இவர் சோமசுந்தரம், செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜீவரட்ணம், பத்மாவதி, பத்மலோஜினி, ஜீவகுமார் (ஈழநாடு], பத்மஜோதி. ஜீவபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 39/5 3-ம் ஒழுங்கை, மின்சார நிலையவீதியில் 14-04-92 செவ்வாய்க்கிழமை பி.ப. 3-30 மணிக்கு நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரிகைக்சாக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஜீவகுமார்
(மகன்),
செல்லத்துரை தேவராஜா
(பெருமகன்)

(சி 6159)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81